[25th January 1972

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, திட்டமிடுவது என்பதைப் பற்றிய பொதுவான கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தேதியில் திட்டமிடுகிறபொழுது இப்படிப்பட்ட எண்ணத்தோடு என்றுதான் பொருளே தவிர ரூ. 938 கோடி செலவழிக்கப்படுமென்றும் இந்தச் செலவோடு நின்றுவிடுமென்றும் சொல்ல முடியாது. ஒரு வேளை 20 ஆண்டு காலத்தில் என்று மேற்கொள்ளப்படுவதை முடிக்க 30 ஆண்டுக் காலம் கூட ஆகலாம். இப்படிப்பட்ட திட்டத்தினுல் எந்த வழியில் முன்னேறுகிறோம், எந்த வகையான அமைப்புக்கு உட்படுகிறோம் என்று தெரியும். மத்திய அரசு ஒப்புக்கொண்டால், 5 ஆண்டுக் காலத்திற்குள் குறுகிய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன் கூட்டியே, அது நிறைவேறுவதற்கான முயற்சியை எடுத்துக்கொள்ளும்போது, பொது மக்களுக்கு விளக்கமாகத் தெரிவிக்க வாய்ப்பு ஏற்படும்.

Erskine Hospital, Madurai

* 27 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of Thiru D. SANTOSHAM) Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether there are facilities for fitting artificial limbs to patients whose limbs are amputated in the Erskine Hospital at Madurai; and

(*b*) if not, whether there is any proposal to set up a suitable unit at Madurai?

எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) உறுப்புகள் வெட்டியெடுக்கப்பட்ட நோயாளிகட்கு செயற்கை உறுப்புகள் பொருத்துவதற்கு மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையில் வசதிகள் உள்ளனவா?

(இ) இல்லையெனில் அதற்கான தக்க பிரிவு ஒன்றை மதுரையில் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Rice Smuggling

*28. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the number of donkey impounded in connection with the rice smuggling cases near Tamil Nadu–Kerala border during 1970–71 ?

25th January 1972]

அரிசி கடத்தல்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

1970-71-ஆம் ஆண்டில் தமிழ்நாடு-கேரளா எல்லையில், அரிசி கடத்தல் வழக்குகள் தொடர்பாக பட்டியில் அடைக்கப்பட்ட கழுதைகளின் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1970-71ல் தமிழ் நாடு கேரள எல்லைகளுக்கருகே, அரிசி கடத்திய நேர்வுகள் தொடர்பாக, குற்றப்புலனாய்வுத் துறையின் உணவுப்பிரிவு அதிகாரிகளால் நூற்று முப்பத்து மூன்று கழுதைகள் பிடிக்கப்பட்டுப் பட்டிகளில் அடைக் கப்பட்டன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அந்தக் கழுதை களின் சொந்தக்காரர்கள் பிடிக்கப்பட்டார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கழுதைகள்தான் பிடிக் கப்பட்டன. சொந்தக்காரர்கள் பிடிக்கப்படவில்லை. அவற்றின் மேல் ஏற்றி வந்த அரிசியை அரசு பறிமுதல் செய்தது. கழுதை களைப் பிடித்து பட்டியில் அடைத்து கடைசியில் அபராதம் விதிக் கப்பட்டது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : உணவுப் பொருள்களைக் கள்ளத்தனமாக ஏற்றிக்கொண்டு போகும் பிற வாகனங்களைப் பறி முதல் செய்வதைப் போல, கழுதைகள் பறிமுதல் செய்யப்பட்ட னவா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கழுதைகளைப் பிடித்து நீதி மன்றத்தில் கொண்டுபோய் நிறுத்தினதும் ரூ. 10 அபராதம் போடப்பட்டு, அதை அவர்கள் கட்டி, கழுதைகளை எடுத்துக் கொண்டு போனதாகத் தெரிகிறது. வேறு தகவல் இல்லை. அங்கத் தினர் சொல்வதைப் போல, கழுதைகளைப் பறிமுதல் செய்து ஏலம் போடலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அபராதம் கட்டிவிட்டார்கள் என்று சொன்னார்கள். அபராதம் கட்டிய அந்தச் சொந்தக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்ததற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கழுதைகளைத்தான் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் கொண்டுபோய் நிறுத்தினார்கள். ஒரு வழக்கில் ரூ. 10-ம் வேறு வழக்கில் ரூ. 40-ம் அபராதம் போட்டிருக் கிறார்கள். பாக்கி இரண்டு வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதாக விவரமிருக்கிறது. அங்கத்தினர் சொல்வதைப் போல, கழுதை களை மீட்க வருகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். அப்படி எடுக்கும்போது கழுதைகளை நம்மிடத்திலேயே விட்டுவிட்டுச் சென்றுவிட்டால், என்ன செய்வது என்பதுதான் பிரச்னை.

[25th January 1972

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அபராதம் செலுத்தும் வரையில் கழுதைகள் என்ன செய்யப்பட்டன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கழுதைகளாக இருந்தாலும் வாயில்லாப் பிராணிகள். அரசாங்கம் அவற்றிற்குத் தீனி போட வேண்டிய அவசியத்திற்கு ஆளாகியிருக்கிறது.

Prices of Edible Oils

* 29. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(*a*) whether the Government are aware of the rise in prices of edible oils in the State; and

(*b*) if so, the details thereof?

உட்கொள்ளத்தக்க எண்ணெய்களின் விலை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இம்மாநிலத்தில் உட்கொள்ளத்தக்க எண்ணெய்களின் விலை உயர்ந்துள்ளதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) உணவிற்குப் பயன்படும் எண்ணெய் வகைகளின் விலை இம்மாநிலத்தில் பொதுவாக இறங்குமுகமாகவுள்ளது.

(இ) இவ்வினா எழவில்லை.

Craft Instructors

* 30. *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) the number of Craft Instructors in Industrial Training Institutes in Tamil Nadu who possess National Apprenticeship Certificates (1961 Act);

(*b*) the number of such Instructors whose services have not yet been regularised as on date ; and

(*c*) the reasons therefor?

கைத் தொழில் ஆசிரியர்கள்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாட்டில், தொழிற் பயிற்சிக் கூடங்களில் உள்ள தேசியத் தொழில் பயிலுநர்ச் சான்றிதழ்கள் (1961-ஆம் ஆண்டுச் சட்டம்) பெற்றுள்ள கைத் தொழில் ஆசிரியர்களின் எண்ணிக்கை என்ன ?